# சுற்றிக்கை

வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான கல்வி, திறன் மேம்பாடு, பாதுகாப்பு, சமுதாயத்தில் மேம்பட்ட தரத்தினை உருவாக்கும் பொருட்டு, பெண்மையை போற்றிக் காக்க இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆத்திச்சூடியினை பள்ளி சுவர்களில் உடனடியாக எழுதுவதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து அரசு உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பெண்மையைக் போற்றிக் காக்க ஆத்திச்சூடி

ஒ/-

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

01.10.24

பெறுநர்–
தலைமையாசிரியர்கள்,
அனைத்து அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல் –
மாவட்டக் கல்வி அலுவலர்,
(இடைநிலைக் கல்வி)
வேலூர் மாவட்டம்.

# பெண்மையைக் போற்றிக் காக்க ஆத்திச்சூடி

•••••

- அறிவு கொடுத்து அன்பைப் பெறு.
- ஆணாதிக்கத்தைச் செலுத்தி அவமதிக்காதே.
- இன்பமாய்ப் பேசி இச்சை கொள்ளாதே.
- ஈடில்லா இணையென இயல்பாய் நடத்து.
- உன்னதமானவள் என உவந்து போற்று.
- ஊக்கம் அளித்து உயரத்தில் நிறுத்து.
- எஃகினைப் போன்ற உறுதி கொடு.
- ஏடு தந்து ஏற்றம் பெறச் செய்.
- ஐயம் கொண்டு அச்சுறுத்தாதே.
- ஒருத்தியுடன் மட்டும் ஒழுக்கத்துடன் வாழ்.
- ஓராயிரம் திறனுள்ளவளை ஒடுக்கி வைக்காதே.
- ஔவை போன்று ஆளுமை பெறச் செய்.
- முயற்சி செய் ! பயிற்சி செய் ! வளர்ச்சி அடை !
- உண்மை, உழைப்பு, ஒழுக்கம்
  உன்னை உயர்த்தும்.
- மங்கையரே மானுடத்தின் ஆதாரம்
  மனிதமின்றி செய்யாதே அவர்கட்கு சேதாரம்
- மகிழ்வித்து மகிழ ,,,,,,,
  மதுவை மறப்போம் !